மிகவும் பயந்தாள். கைகள் நடுங்கின. ரோட்டில் கார் ஓட்டுவது அவளுக்கு கடினமாக இருந்தது.

“ரோட்டுல கார் ஓட்டுறது ரொம்ப கஷ்டம்,” என்று அவள் சொன்னாள்.

ஆனால் அவள் விடாமல் முயற்சி செய்தாள். தினமும் பயிற்சிக்கு சென்று மெதுவாக கற்றுக் கொண்டாள். இரண்டு வாரங்களில் அவள் நன்றாக கார் ஓட்டத் தொடங்கினாள்.

ஸ்டீபன் ஒருநாள் வந்து,

“உங்க அம்மா ரொம்ப நல்லா கார் ஓட்டுறாங்க!” என்று சொன்னான்.

அதை கேட்ட ஸ்வேதாவுக்கு பெருமையாக இருந்தது. அம்மாவின் முகத்தில் ஒரு புதிய ஒளி தெரிந்தது. முன்பு எப்போதும் தலையை குனிந்து நடக்கும் அவள், இப்போது தன்னம்பிக்கையுடன் நடக்கத் தொடங்கினாள்.

ஒருநாள், அவள் தனியாகக் காரை எடுத்துக் கொண்டு அருகிலுள்ள சந்தைக்குச் சென்று வந்தாள். அந்த நாள் அவள் முகத்தில் இருந்த மகிழ்ச்சி விவரிக்க முடியாதது.

பின்னர், ஸ்வேதா, சந்திரன் மற்றும் குழந்தைகள் அனைவரும் சேர்ந்து ஷாப்பிங் மாலுக்குச் சென்றார்கள். அம்மா மிகவும் நிதானமாகவும் நம்பிக்கையுடனும் கார் ஓட்டினாள். சாலைவிதிகளை முறையாகப் பின்பற்றினாள். அதை பார்த்த அனைவரும் ஆச்சரியப்பட்டனர்.

அடுத்ததாக, அவர்கள் மைசூருக்கு காரில் சென்றார்கள். நீண்ட தூரம் இருந்தாலும், அம்மா எந்தப் பயமும் இல்லாமல் கார் ஓட்டினாள். அவள் காட்டிய தைரியம் அனைவரையும் வியக்க வைத்தது.

இந்த மாற்றத்தைப் பார்த்த ஸ்வேதா யோசித்தாள். இத்தனை திறமை இருந்தும், ஏன் இவ்வளவு ஆண்டுகள் அம்மா இப்படியே அமைதியாக இருந்தாள்? ஒருவேளை அவளுக்கு வாய்ப்பு கிடைக்காமல் போயிருக்கலாம்.

கார் ஓட்டத் தொடங்கிய பிறகு, அம்மா அதிகாலை நேரங்களில் வெளியே சென்று காய்கறி மற்றும் பழங்கள் வாங்கி வருவாள். அந்த அனுபவம் அவளுக்கு ஒரு புதிய வாழ்க்கையைத் தந்தது. அவள் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தாள்.

ஆறு மாதங்கள் கழித்து, அம்மா தன் ஊருக்குத் திரும்ப வேண்டும் என்று கூறினாள். பேருந்து நிலையத்திற்குச் செல்லும்போதும் அவளே காரை ஓட்டிக் கொண்டு சென்றாள்.

அப்போது சந்திரன்,

“அடுத்த முறை நீங்க கார்லயே ஊருக்குப் போயிட்டு வரலாம்,” என்றான்.

அதை கேட்ட அம்மா மகிழ்ச்சியுடன் தலையாட்டினாள்.

அந்தச் சிறிய விருப்பம்ஸீ கார் ஓட்டக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆசைஸீ அம்மாவின் வாழ்க்கையை முழுவதும் மாற்றிவிட்டது.

**இந்தக் கதை சொல்லும் உண்மை:**

வாய்ப்பு கிடைத்தால், எந்த வயதிலும் மனிதன் தனது திறமைகளை வெளிப்படுத்தி புதிய வாழ்க்கையைத் தொடங்க முடியும்.



# வாழ்வின் தேவை


முனைவர் **யு.துர்காதேவி**

உதவிப்பேராசிரியர்




**ஸ்**வேதா தனது இரண்டாவது குழந்தையைப் பெற்றபின் உடல்நலம் சரியில்லாமல் இருந்தாள். பிரசவத்தின் போது ஏற்பட்ட சிக்கலால் அவள் இரண்டு மாதங்கள் படுக்கையிலேயே இருந்தாள். ஆனால் வேலைக்கு மீண்டும் செல்ல வேண்டிய கட்டாயம் இருந்ததால், குழந்தையைப் பார்த்துக் கொள்வதற்காக தனது அம்மாவை ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து பெங்களூருக்கு வரவழைத்தாள்.

அப்பா உயிருடன் இருந்த காலத்தில், அம்மா ஒருபோதும் தனியாக எங்கும் போகவில்லை. எப்போதும் வீட்டிலேயே இருந்தவள். ஆனால் இப்போது அவள் தனியாகப் பேருந்தில் ஏறி பெங்களூருக்கு வந்து, ஆட்டோ பிடித்து வீடு வந்துவிடுகிறாள். இது ஸ்வேதாவுக்கு ஒரு சிறிய ஆச்சரியமாக இருந்தது.

அம்மா வீட்டில் எல்லா வேலைகளையும் கவனித்தாள். பேரனான கவினை சமாளிப்பது அவளுக்குப் பெரிய வேலை. அவன் மிகவும் சுறுசுறுப்பானவன். ஒருநாள் குழந்தை அழுவதை நிறுத்துவதற்காக ஸ்பூன் நிறையச் சீனியை அதன் வாயில் வைக்க முயன்றான். மற்றொரு நாள் குழந்தையின் அருகே பூச்சி மருந்தை தெளித்தான். இந்தச் செயல்கள் எல்லாம் அம்மாவை பயமுறுத்தினாலும், அவள் எதையும் குறையாகச் சொல்லவில்லை. அமைதியாக எல்லாவற்றையும் சமாளித்தாள்.

ஒருநாள், வீட்டின் பார்க்கிங்கில் நிற்கும் காரைப் பார்த்துக் கொண்டு அம்மா கேட்டாள்:

“இந்த கார் ஏன் சும்மா நிக்குது?”

“எப்போதாவது வெளியே போகும்போது பயன்படுத்துவோம்,” என்றாள் ஸ்வேதா.

சில நிமிடங்கள் அமைதியாக இருந்த பிறகு, அம்மா தயக்கத்துடன் கேட்டாள்:

“நான் கார் ஓட்ட கத்துக்கிட்டா எப்படி இருக்கும்?”

இந்தக் கேள்வி ஸ்வேதாவுக்கு எதிர்பாராத ஒன்றாக இருந்தது. இதுவரை எந்த விருப்பத்தையும் வெளிப்படுத்தாத அம்மா இப்படிக் கேட்டது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. முதலில் சிரிப்பாக இருந்தாலும், அவள் அதை வெளிப்படுத்தவில்லை.

“சரி அம்மா, ஏற்பாடு பண்ணுறேன்,” என்றாள்.

ஸ்வேதாவின் நண்பர் ஸ்டீபன் ஒரு டிரைவிங் ஸ்கூலை ஏற்பாடு செய்தான். அங்கு ஒரு பெண் பயிற்சியாளர் கார் ஓட்டக் கற்றுக் கொடுத்தார். முதல்நாளில் அம்மா